ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# Vernacular Tamil Dialect on Philosophy

# பேச்சுத்தமிழ் வழக்கில் மெய்யியல்

S. Vignesh
*Research Scholar, Tamil Department, Thavathiru Santhalinga Adigalar Arts, Science and Tamil College, Coimbatore, India*
**சு. விக்னேசு**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் தமிழ்க்கல்லூரி, கோவை, இந்தியா*

***Article Info:***

Received 15-11-2023 | Accepted 07-12-2023 | Published 08-01-2024
Volume 02 Issue 01 January 2024 | Page No : 06-09

**ABSTRACT**

Based on the literary, grammatical history and archeological remains it is proven that the Tamil language is more than two thousand years old. This article is based on the hypothesis that the people who lived long before the arrival of religious norms and foreign language philosophies, the beliefs they had about the field we call philosophy today, would have been recorded in such a way as to use language to convey them to others. It indicates that there are thoughts about what happened actually.

***Keywords:***

*Tholkappiyam, Ezhuthathikaaram, Philosophy, Dialect, Belief, Oaths, Tamil Philosophy*

## முன்னுரை

தமிழ்மொழியில் மெய்யியலை ஆராயும் வகையில், தமிழர் சமயம் (கா.சு. பிள்ளை, 1940), தமிழும் தத்துவமும் (சோ.ந. கந்தசாமி), சைவசித்தாந்த சாத்திர வரலாறு (க. வெள்ளைவாரணனார்), தமிழரின் தத்துவ மரபு (அருணன், 2004), தமிழகத் தத்துவம் – உலகாயதம் (கி. முப்பால்மணி, 2013), தமிழகத் தத்துவச் சிந்தனை மரபுகள் (கி. முப்பால்மணி, 2008), தமிழகத் தத்துவ ஞானம் (கா. திருநாவுக்கரசு, 2021), தமிழர் மெய்யியல் கோட்பாடு (திருக்குறள், ஔவை நூல்கள்) (நா.வை. குமரிவேந்தன் 2015), தமிழர் மெய்யியல் (குணா, 2020), ஏரணம் (குணா, 2018), எண்ணியம் (குணா) ஆகிய பல நூல்கள் எழுந்துள்ளன. இவை தமிழிலக்கியங்களின் அடிப்படையில் தமிழ்ச் சமுதாயத்துள் நிலவிய மெய்யியலை ஆராய்ந்து விளக்குவனவாக அமைந்துள்ளன. கே. இலட்சுமணன் எழுதிய இந்தியதத்துவஞானம் எனும் நூல் இந்திய நாடு முழுவதும் இருந்த தத்துவ மரபுகளை எடுத்துரைப்பது. இலக்கியச்சான்றுகளை மையமாகக் கொள்ளாது, தமிழர்தம் பொது மெய்யியல் எவ்வாறு இருந்தது என்பதை விளக்கும் ஆய்வுகள் வந்துள்ளதாகத் தெரியவில்லை. வேதமரபுகளும், சமய மரபுகளும் சாராத மெய்யியல் மரபு தமிழ்ப் பண்பாட்டில் இன்றும் நாட்டுப்புற மக்களிடத்து வழங்கிவருவதைக் காணமுடிகிறது. இதனை ஆராய்வதற்கு அம்மக்களின் வழக்கங்கள், பரம்பரைக் கருத்துக்கள், மொழிநடை ஆகியவற்றைத் தொகுத்து ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தமிழகத்துள்ளும், தமிழிலக்கிய மரபுகளுக்குள்ளும் பிற பண்பாட்டுத் தாக்கங்கள் வருமுன்னர் இருந்த தமிழர்தம் தனித்த மெய்யியலை அறியத் துணைசெய்யும். இக்கருதுகோளைத் துலக்கம் செய்யும் வகையில், தமிழ்மொழியின் வழக்கியல் நிலையைக் கொண்டு இம்மொழியை வழங்கும் மக்களது மெய்யியல் சார்ந்த கொள்கைகளை அறிமுகம் செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## மெய்யியல் குறித்த புரிதல்

ஒரு பண்பாட்டின் மெய்யியலைக் கண்டடைதற்கு, முதலில் மெய்யியல் என்னும் துறை குறித்த புரிதல் தேவையாகிறது. மெய்யியல் என்பது பன்முகப்பொருள்கொண்டு கையாளப்படுகிறது. மேற்கத்தியக் கோட்பாடுகளில் புதிய இலக்கியக் கொள்கைகளும், சமூகக் கொள்கைகளும், ஆய்வு முறைகளும் மெய்யியல் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. 'தத்துவம் என்றாலே சமயவகைப்பட்ட ஒரு துறை என்ற கருத்தே நிலவுகிறது. இது இந்தியமரபு சார்ந்த ஒரு விளைவு' **(முத்துமோகன்.ந., முன்னுரை: 2000)**. பேட்ரண்ட் ரஸ்ஸல் என்பவர், "வாழ்க்கையைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் 'மெய்யியற் சார்பானவை' என நாம் வழங்கும் கருத்துப் படிவங்கள் இரு ஆக்கக் கூறுகளின் விளைபொருளாகும். ஒரு கூறு மரபுவழி வந்த சமூக ஒழுக்கவியற் கருத்துக்களை உள்ளடக்கியது. மற்றொரு கூறு மிகப்பரந்த பொருளில் 'விஞ்ஞானவியல் சார்ந்தது' என நாம் வழங்கும் ஆராய்ச்சி முறையைத் தழுவியது. இவ்விரு ஆக்கக் கூறுகளும் பொருந்தியிருந்த தகவுப்பொறுத்த அளவைப் பொறுத்தே வெவ்வேறு மெய்யியற் காட்சிகள் தமக்குள் வேறுபட்டன. ஆயினும் இவ்விரண்டும் இணைந்தே மெய்யியல் உருவாகிறது **(கைலாசபதி.க, 20: 2017) என வரையறை செய்கிறார்**.

பொதுநிலையில், உலகின் உண்மையையும் உலகில் உள்ளவற்றின் உண்மை இயல்பையும் ஆராயும் அறிவியலாக மெய்யியல் அமைகிறது. ஆதலால் உலகத்தோடு ஒட்டி வாழ்ந்த மனிதன் தன்னைப் பற்றியும், தனது பிறப்புக்கும் இறப்புக்கும் முந்தைய நிலைகளையும், ஆன்ம சிந்தனையையும், உலக இயல்பைப் புரிந்துகொள்ள மேற்கொண்ட முயற்சியையும் மெய்யியல் என வரையறுக்கலாம். இது சமயச் சார்பின்றித் தோன்றியதாகும். மனிதனது உள்ளத்தில் எழும் தன்னிலை குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இம்மெய்யியல் கூறுகள் தோன்றின எனலாம். அக்கேள்விகளுக்கு அறிவுக்கு எட்டும் சமாதானங்கள் இல்லாதபோது வேறு நம்பிக்கையை ஒட்டிய கருத்துக்கள் தோன்றின. இந்த நம்பிக்கைகளுக்குப் பதிலளிக்கும் கதைகள் தோன்றி, தொன்மங்களாக நிலைபெற்றன. இவ்வாறு இந்தியத் தத்துவ மரபில் வேதம் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆதலால் இந்தியத் தத்துவங்களை ஆராய்ந்த கி. லட்சுமணன், 'இந்திய மெய்யியலைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சி என்றைக்கோ முடிந்து முடிவுகளும் அறுதியாக வெளியிடப்பட்டுவிட்டன. பின்வந்த ஞானிகளின் ஆராய்ச்சிகள் யாவும் அம்முடிவுகளைச் சரியாக விளங்கிக் கொள்வதன் பொருட்டே மேற்கொள்ளப்பட்டன' **(லட்சுமணன்.கி, 2: 2008)**.

இவ்வாறு 'மெய்ப்பொருளினை அறிவதே முக்கியம் என்ற இந்நாட்டினர் கருதியதால் பல தத்துவங்கள் அடுத்தடுத்து வாழ வழி ஏற்பட்டதைக் காண்கிறோம்' **(ராமகிருஷ்ணன்.எஸ்.,112:2011)**. பல தத்துவ மரபுகள் கிளைத்துத் தோன்றிய போதிலும், 'உலகாயதம் ஒன்றைத்தவிர இந்திய மெய்யியல் பிரிவுகள் வேத உபநிடதங்களை மூலத்தோற்றுவாயாகக் கொண்டவையே' **(கைலாசபதி.க,16:2017)**. இது இந்திய மெய்யியலில் வேதங்களுக்கிருந்த முதன்மையான ஆட்சியைக் காட்டுகிறது. எனவே, இந்திய மெய்யியல் மரபு வேதமென்பதை மையப்படுத்தி அதனை விளங்கிக் கொள்வதன் பொருட்டும், அவ்வேத மரபை மறுப்பதாகவும் பல கிளைகளாகத் தத்துவப் பார்வைகள் நிகழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.

## தமிழர் மெய்யியல்

பல்வகைப்பட்ட தத்துவ மரபுகளுக்குத் தொட்டிலாக விளங்கிய இந்திய நாட்டின் தெற்குப்பகுதியாக இருப்பது தமிழகப் பரப்பு. இந்நிலத்துள் வாழ்ந்த மக்களது மொழியும் பழக்கங்களும் இந்திய நாடு முழுவதுமான பண்பாட்டுக் கூறுகளோடு தனித்த சிறப்புடையனவாகப் பேசப்படுகின்றன. அம்மக்களும் மெய்யியல் என்னும் பொருண்மையில் தங்களது சிந்தனைகளைச் செய்திருப்பர். பொதுநிலையில், 'இந்த உலகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ புரிந்துகொள்ள மாந்தர்கள் காலந்தோறும் முற்பட்டே வந்துள்ளார்கள். அதேபோல தமிழர்களும் முற்பட்டதன் விளைவாகவே சில முடிந்த முடிபுகளுக்குத் தமிழர்கள் வந்தனர். அவற்றையே தமிழர் மெய்யியல் என்கிறோம்' **(தம்பியன்., 2020)**. மெய்யியல் என்பது மனித வாழ்வோடு தொடர்புடையது. அவ்வகையில் தமிழரது வாழ்வியல் குறித்துக் கிடைக்கும் எழுத்துச் சான்றுகளில் திணைக் கோட்பாட்டுமரபை அடியொற்றித் தமது வாழ்வியலை அமைத்துக் கொண்டிருந்தமையை அறியமுடிகிறது. அக்கோட்பாட்டில் தோன்றிய தமிழிலக்கியங்கள், தமிழனின் மெய்யியலானது தன்னைவிட்டுப் பிரிந்த தலைமக்களைத் தன்னுடனேயே வைத்துக் கொள்ளவும், அவர்களை நினைத்துப் பின்பற்றவும் விரும்பியநிலையில் நடுகல்லாக, குலதெய்வமாக, சிறுதெய்வமாக, பெருந்தெய்வமாக வளர்ந்ததைக் காட்டுகின்றன. நமக்குக் கிடைத்தவற்றுள் முதல் இலக்கண நூலான தொல்காப்பியக் காலந்தொட்டுத் தெய்வங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் சமயங்கள் இல்லை. நிலத்திற்கு உரியனவாக வகுக்கப்பட்ட தெய்வங்கள் வேறு நிலத்திற்கும் வரலாம். குறிஞ்சி நிலத்திற்கு உரிய முருகன் நெய்தல் நிலத்திலும் இருக்கிறான். காடுறையும் மாயோன் மலையிலும் இருக்கிறான். இதுவன்றி, சாத்தன் முதலிய பல தெய்வங்களும், தாய்த்தெய்வங்களும், நடுகல் தெய்வங்களும் இருந்துள்ளன. இன்றும் இருந்து வருகின்றன. இது தமிழ்மக்களது சிந்தனைக்குள் ஒன்றிவந்த பொதுமையான இறைக் கொள்கை எனலாம். இக்கொள்கையில் நேர்ந்த கலப்புகள் பின்னாளில் சமய நெறிகளுக்கு வித்திட்டன.

இவ்வாறான சமயங்கள் தோன்றாக் காலத்தில், மனிதனது நம்பிக்கைகள், அவன் உயிர், உடல், காலம், சான்றுகள் முதலியவற்றைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்தத் துணையாகவும் கருவியாகவும் இருந்திருப்பது மொழி. அக்காலந்தொட்டு இன்றுவரையிலும் வழங்கிவரும் மொழி ஒன்றில் அச்சிந்தனைகளது தாக்கங்கள் பதிவாகியிருக்கும். அத்தைய மொழிகளில் தனக்கேயுரிய இடத்தையுடைய தமிழ்மொழியின் பேச்சுவழக்கில் ஏறியுள்ள மெய்யியல் சிந்தனைகளையும் இனங்காண முடியும். இக்கருத்துக்கு 'தமிழ்மொழியமைப்பிலேயே உயர்ந்த மெய்நூற் கருத்துக்களை விளங்கும்படி செய்தனர். அது சில தமிழ்ச்சொற்களின் ஆராய்ச்சியினால் நன்கு புலனாகும்' **(சுப்பிரமணியப்பிள்ளை.கா., 46:2011)** என்னும் கூற்றும் துணைசெய்கிறது.

## உடல் – உயிர் உடைமைக் கொள்கை

உடல் உயிராகாது என்பதைப் பரிமேலழகர் 'தானல்லாத உடம்பை யானென்று **(குறள்:106-உரை)**' எனக்குறிப்பர். உடல் உயிரிலிருந்து வேறுபட்டது என்ற கொள்கையை மெய்கண்டார், "எனது உடல் என்றலின் ஆன்மா உளது" எனும் மூன்றாம் நூற்பாவின் அதிகரணத்தால் விளக்குகிறார் **(அருணைவடிவேலு முதலியார்.சி.,2014: 370)**. அதாவது எனது என உடைமைப் பொருளாக உடலைக் குறிப்பதால் இவ்வுடலை உடைமையாகக் கொண்ட ஒன்று உள்ளது. அது உயிர் என்பது இவ்வதிகரணத்தின் பொருளாகும். ஆனால் தமிழ் வழக்கில் என்னுயிர் என்ற சொல்லாடலும் பழங்காலந்தொட்டு வழங்கிவருகிறது. இது உயிரும் ஒரு உடைமைப் பொருளாக உடலுக்குள் இருப்பதைக் காட்டுகிறது. எனில் உயிரை உடைமையாகக் கொண்டது எது? என்ற வினாவும் தோன்றுகிறது. உயிரும் உடலும் இணைந்து இன்ப துன்பங்களை நுகர்கிறது. அவற்றுள் உயிர்க்கு இன்பத்தின் மீதான விருப்பைச்செய்வது மனமெனும் உறுப்பாகும். இதை, 'எல்லா உயிர்க்கு மின்பமென்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் **(பொருள்-217)'** என்கிறது தொல்காப்பியம். இத்தகைய மனம், உயிருக்கு ஒரு கருவி என்கிறது சைவ சித்தாந்தம். இக்கருவியை உயிர் இயக்காமல், மனமெனும் கருவியின் வழி உயிர் இயங்குவதால் 'என் உயிர்' என்ற சொல்லாடல் தோன்றுகிறது. இதன்வழி உயிரை 'எனது' என உடைமையாக்கும் பண்பு மனதுக்கு இருப்பதை அறியமுடிகிறது.

## தமிழில் நம்பிக்கை சார்ந்த வழக்குகள்

இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்ட தமிழினம் நிலையாமயை நன்குணர்ந்திருந்தது. வீட்டிலிருந்து வெளிச்செல்லும்போதும் ஓரிடத்திற்குச் சென்று வரும்போதும் 'போய் வருகிறேன்' என்று கூறுவது வழக்கம். இது நான் மறுபடியும் வருவேன் என்னும் பொருளைத் தருகிறது. இழவு நடந்த வீடுகளில் இந்தச்சொல், 'இன்னொரு இறப்புக்கு வருவேன்' என்ற பொருள்படுவதை அஞ்சித் தவிர்ப்பது வழக்கம். இதுபோலவே, இல்பொருளை நேரடியாக இல்லை எனும் சொல்லால் குறிக்காமல் வேறு ஒரு பொருளைக் காட்டி இது உள்ளது எனக்கூறும் வழக்கமும் இலக்கண வரையறையாகியுள்ளதைக் காணமுடிகிறது **(தொல்.,கிளவி.,நூ.எ-35)**. அவையல் கிளவிகளாக வழங்கும் சொற்களை மங்கலமாகச் சொல்லுதல் முதலிய பேச்சுவழக்குகள், தன்னையறியாமல் தன்னால் சொல்லப்படும் சொல்லினால் வேறு விளைவுகள் தோன்றிவிடக் கூடும் என்ற எண்ணம் தமிழ்ச்சமூகத்தில் நிலவியிருந்துள்ளதைக் காட்டுகின்றன.

## காலமும் வினையும்

தமிழினைப் பேச்சுவழக்கில் கையாளும் சொல்லாடல்கள் சில, மெய்யியல் கொள்கைகளுக்குப் பொருந்துகிறது. எல்லா மொழிகளும் அடிப்படைக் கட்டமைப்பில் ஒன்றுபடுவன. அதாவது காலம், எழுவாய், வினை, இடம், பால் முதலியன எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை. இவற்றுள், காலம், வினை, இடம், எழுவாய் என்பன ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை மெய்யியலில் தனித் தத்துவங்களாக விளக்கப்பெறுகின்றன. இவ்வகையில் சில சொல்லாடல்கள் தமிழில் மெய்யியல் கொள்கைகளை உடையனவாகின்றன. சான்றாக, 'மழை வரப் போகிறது' எனும் தொடரை, மழை வருகிறது அல்லது மழை வரும் எனும் தொடர்களால் குறிக்கலாம். ஏன் வரப்போகிறது எனக் குறிக்க வேண்டும். மழை வருகிறது. எனில் இதில் போகிறது எது? என்ற கேள்வி உண்டாகிறது. காலமும் வினையும் நெருங்கிய தொடர்புடையன. எல்லா வினைகளும் குறித்த கால அளவைப்பெற்றே நடைபெறுகின்றன. ஆதலால் மழை வரும்போது போவது காலம் எனக் கொள்வது பொருந்தும். ஆனால் மழையால் போவது காலம் எனக் கொள்ளப் போதுமான சான்றுகள் இல்லை. கடந்த காலம் என வழங்கும் சொல்லாடலை இதற்குச் சான்றாக நிறுத்தலாம். தமிழன் தான் காலம் எனும் கட்டுக்குள் வாழ்கிறோம் என்பதை உணர்ந்திருந்தமையை இச்சொல் வழக்குக் காட்டுகிறது. **கடந்தேன் – கடத்தினான் - கடத்தியது** எனும் சொல்லாடல்கள் தன்வினை, பிறவினை என்னும் வேறுபாடுகள் கொண்டவை. இவற்றுள் தன்வினைக்கு மெல்லின எழுத்தும், பிறர் ஏவலால் அல்லது தன் செயல்பாடின்றி நடப்பதை வல்லின எழுத்தும் காட்டுகின்றன. இவற்றால், மனிதனுக்கு வரும் வினைகள் தன்னால் தனக்கு வருவதும் (கடந்தான்), தனக்குப் பிறரால் வருவதும் (கடத்தினான்), தனக்கு இயற்கையால் வருவதும் (கடத்தியது) என்ற மூவகையில் அமைவதை வழக்குத் தொடர்களில் காணமுடிகிறது.

### சான்றுக் கொள்கை (பிரமாணம்)

மெய்யியல் மரபில் தனது கருத்தினது உண்மைத்தன்மையைக் அறியச்செய்தற்கு அளவுகோலாகக் காட்டுவன சான்றுகள் ஆகும். இதனைப் பிரமாணம் எனும் சொல்லால் சைவசித்தாந்தம் வழங்குகிறது. முதன்மையான பிரமாணங்கள், புலனறிவு (பிரத்யட்சம்), கருதலறிவு (அனுமானம்), மூத்தோர் சொல் (ஆப்தர்வாக்கியம்) என்பனவாகும். இம்மூன்று சொற்களையும் தமிழில் வழங்குவதில்லை என்றாலும் இச்சான்றுகள் தமிழரது பேச்சுவழக்கில் ஆழப்பதிந்துள்ளது. முதலாவதாகக் காட்டும் புலனறிவு என்பதைக் குறித்தற்கு, 'பிரத்யட்சம்' என்றசொல் பயன்படுகிறது. இதன் நேர் பொருள் கண்ணால் காண்பவற்றை முதன்மையாகக் கொள்ளுதலாகும். கண்ணுக்கு அடுத்த நிலையில் காது, மூக்கு, வாய், உடல் ஆகியவற்றைச் சான்றுகளாகக் கொள்ளுவதாகும். தமிழில் கண்ணுக்குரிய தொழிலாகப் **பார்த்தல்** (ஏவல் வடிவம் - பார்) எனும் சொல்லைக் குறிப்பர். இதற்கு அடுத்த நிலையில் கேட்டல், முகர்தல், பேசுதல், தொடுதல் முதலியவற்றைக் காட்டுவர். இவ்வைம்பொறிகளது தொழிலையும் பேச்சுவழக்கில் சுட்டும் போது கட்புலனறிவுக்குத் தமிழன் கொடுத்துள்ள முதன்மையை அறியமுடியும். சான்றாக, கேட்டுப் பார், முகர்ந்து பார் (மோந்து பார்), பேசிப்பார் அல்லது சொல்லிப் பார், தொட்டுப் பார் என்ற வழக்குத் தொடர்களில் பார் எனும் கண்ணுக்குரிய தொழில் பின்னொட்டாக வருவது பிரத்யட்சம் எனும் சொல்லுக்குரிய நேர்பொருளாகக் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

அடுத்ததாகக் காட்டப்படும் கருதலறிவிலும் கண் எனும் உறுப்பிற்குக் கொடுக்கப்பட்ட இடத்தைக் காணமுடிகிறது. எதையும் அறிவுக்கண் கொண்டு பார்க்க வேண்டும் எனும் தொடரில் சிந்திக்கும் தொழிலாகிய அறிவுப்பொருளுக்குக் கண்ணென்னும் உறுப்பைச் சேர்த்துச் சொல்லும் மரபு அறிதல் அளவைகளில் கண்ணினது துல்லியமான காட்டுதலைக் குறிக்கிறது. இதுபோலவே, ஞானக்கண், நெஞ்சக்கண் முதலிய சொற்களைக் காட்டலாம். இதன் வழக்கு வடிவம் மனசாட்சி என்பது. பேச்சுவழக்கில், மூத்தோர் சொல் ஆகிய ஆப்தர்வாக்கியங்களுக்குப் பழமொழிகள் தக்க சான்றுகள் ஆகும். மனிதவாழ்வின் பட்டறிவு வெளிப்பாடுகள் தமிழ்மரபில் பழமொழிகளாக வழங்கிவருகின்றன. முன்னைய நூல்களும், பாரத, இராமாயணக் கதைகள் முதலியனவும் இதிலடங்குவன.

### முடிவுரை

- நம்பிக்கை சார்ந்த சமூகமாகத் தமிழ்ச்சமூகம் இருந்துவந்துள்ளது. இத்தகைய நம்பிக்கைகளுக்கான காரணங்களைத் தேட முற்படுகயில் பலவிதமான கற்பனைக்கும் கற்பிதங்களுக்கும், பிறமொழித் தாக்கங்களுக்கும் உட்பட்ட தமிழர் மெய்யியல் பண்பாடு சமய வழிப்பட்டது. இது பின்னைய மக்களது, பேச்சு, கருத்து, வாழ்க்கை முறைகளில் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.
- ஐம்பூதங்கள், உடல் – உயிர் பற்றிய ஏற்புகள், மனம் பற்றிய சிந்தனைகள், காலம் பற்றிய விரிவான தத்துவக் கொள்கை மறுபிறப்பு, தெய்வம் ஆகியவற்றின் மீதான வாழ்வியல் கருத்துக்களைக் கொண்டிருக்கும் மொழியாகத் தமிழ் விளங்குகிறது. ஆதலால், தமிழில் வழக்குச் சொல்லாடல்களிலும், இலக்கண வரையறைகளிலும் உடல் – உயிர், பிரமாணங்கள், காலம் – வினை ஆகியன குறித்த கொள்கைகள் இலக்கணமாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

இவ்வகையில் ஒரு காலச்செய்தியை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்த உதவும் வேற்றுமைகளும் அறத்துடன் வாழ்வைக் கட்டமைப்பது, இயற்கையுடன் இயைந்த வாழ்வியல் அறத்தைப் போதித்து இருப்பது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ்த் திணையமைப்பும் மெய்யியல் கூறுகளோடு ஆராயத்தக்கனவாகும்.

### துணை நூற்பட்டியல்

1. சி, அருணை வடிவேலு முதலியார். *சிவஞானபோதத் திருநெறியுரை*. பேரூராதீனம், குமாரதேவர் பதிப்பகம், 2014.
2. கோ, இளவழகன், பதிப்பாசிரியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம் – இளம்பூரணம்*. இரண்டாம்பகுதி, சென்னை, தமிழ்மண் பதிப்பகம், 2003.
3. கணியன் பாலன். *பழந்தமிழகத்தில் மெய்யியல்*. தமிழினி, 9 ஜூலை 2018. https://tamizhini.in/
4. கா, சுப்பிரமணியப்பிள்ளை. *தமிழர் சமயம்*. முதற்பதிப்பு, சென்னை, சாரதா பதிப்பகம், 2011.
5. ச, தண்டபாணி தேசிகர், பதிப்பாசிரியர். *திருக்குறள் அறத்துப்பால் உரைவளம்*. சென்னை, அம்பை நூலக வெளியீடு, 1984.
6. தம்பியன். *தமிழர் மெய்யியல் செல்வி*. யாழ் இணையம், 2020. https://yarl.com/
7. ந, முத்துமோகன். *ஐரோப்பியத் தத்துவங்கள்*. முதற்பதிப்பு, பெங்களூர், காவ்யா, 2000.
8. எஸ், ராமகிருஷ்ணன். *சமய வாழ்வில் வடக்கும் தெற்கும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011.
9. கி, லட்சுமணன். *இந்திய தத்துவ ஞானம்*. சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 2008.

## References


1. S, Arunai Vadivelu Mudhaliyar. *Sivagyanabodha Thiruneriyurai*. Perur Aadheenam, Kumaarathevar Publications, 2014.
2. K, Ilavalagan, Editor. *Tholkappiyam Porulathikarm - Ilambooranam*. Secondpart, Chennai, Tamilman Publications, 2003.
3. Kaniyan Balan. *Philosophy in Palanthamil*. Tamizhini, 9 July 2018. https://tamizhini.in/
4. K, Subramania Pillai. *Tamil religion*. First Edition, Chennai, Sarada Publishing House, 2011.
5. S, Dhandapani Desikar, Editor. *Thirukkural Arathupal Uraivalam*. Chennai, Ambai Library Publication, 1984.
6. Thambiyan. *Tamilar Meiyiyal selvi*. Yarl Inayam, 2020. https://yarl.com/
7. N, Muthu Mohan. *European philosophies*. First Edition, Bangalore, Kavya, 2000.
8. S, Ramakrishnan. *North and South in religious life*. Chennai, New Century Book House, 2011.
9. K, Lakshmanan. *India Thathuva Gnanam*. Chennai, Pazhaniyappa Brothers, 2008.


**How to cite this article:** S. Vignesh. "Vernacular Tamil Dialect on Philosophy". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 2, no. 1, Jan. 2024, pp. 06-09, https://aijtls.com/index.php/aijtls/article/view/32.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.